**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ம் நாள் புதன்கிழமை**

**அசல் வழக்கு எண்.24/2024**

**இ.ம.எண்.12/2025**

சிறும்பாயி ...**மனுதாரர்/வாதி**

**/எதிர்/**

1) லட்சுமாயி (எ) சகுந்தலா

2) பழனியம்மாள்

3) செல்வி ..**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இம்மனு எனது முன்னிலையில் இன்று 04.02.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ஜாபர் சேட் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சரவணன் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6, விதி 17 உடனிணைந்த பிரிவு 151ன் கீழ் மனுதாரர்/வாதியால், அசல் வழக்கின் வழக்குரையை, கண்டவாறு திருத்தம் செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர் மனுவின் சுருக்கம்:</u>**

**2)** மனுதாரர் மேற்படி அசல் வழக்கின் வாதியாவார். அசல் வழக்கு நிலுவையில் இருக்கும் சமயம், 1ம் பிரதிவாதியாகிய லெட்சுமாயி (எ) சகுந்தலா என்பவர் தமக்கு உரிமையில்லாத நிலையில் வழக்கு சொத்துக்களைப் பொறுத்து 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்கள் பெயருக்கு, கடந்த 10.01.2025 அன்று மோசடியாக ஆவணம் ஏற்படுத்தி பதிவு செய்யப்பட்டது தொடர்பாக, மேற்படி நபர்களை தரப்பினர்களாக சேர்க்க இந்நீதிமன்றத்தில் மனு செய்து, மேற்படி இ.ம.எண்.10/2025 என்ற எண்ணில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு, கடந்த 08.08.2025 அன்று அனுமதித்ததன் பெயரில், அசல் வழக்குரையை, இம்மனுவில் கண்ட திருத்தல் விபரப்படி திருத்தம் செய்ய உத்தரவாக இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவை அனுமதிப்பதன் மூலம் மனுதாரரின் உரிமையை தக்கவைக்கக்கூடும். இல்லாவிடில், மனுதாரருக்கு ஏராளமான கஷ்டமும், நஷ்டமும் ஏற்படக்கூடும். எனவே, இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவுரையின் சுருக்கம்:</u>**

**3)** மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மறுக்கிறார்கள். மனுதாரர் தனது மனுவில் 1ம் எதிர்மனுதாரர் தனக்கு உரிமையில்லாத சொத்தை 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களுக்கு, கடந்த 10.01.2025ம் தேதி மோசடியாக கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொண்டார்கள் என்று கூறியுள்ளதை எதிர்மனுதாரர்கள் மறுக்கிறார்கள். 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களை வழக்கில் சேர்க்க வேண்டுமென்று மனு தாக்கல் செய்து, மேற்படி மனுவானது கடந்த 08.08.2025ல்

அனுமதிக்கப்பட்டு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளதை எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

**4)** எதிர்மனுதாரர்களின் கட்சி என்னவென்றால், 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களை நீதிமன்ற உத்தரவின்படி, மேற்படி வழக்கில் 2 மற்றும் 3 பிரதிவாதிகளாக சேர்க்கமுடியும். மேலும், 1ம் எதிர்மனுதாரரிடம் 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்கள் கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் செல்லத்தக்கதல்ல என மனுதாரரால் பரிகாரம் கேட்கமுடியும். ஆனால், மனுதாரர் வேறு பரிகாரம் வேண்டுமென்றால் தனி வழக்குதான் தாக்கல் செய்ய வேண்டும்.

**5)** மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், தாவா சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. மேலும், தாவா சொத்து தனக்கு பாத்தியப்பட்டதாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அசல் வழக்கில் தாவா சொத்து 1ம் எதிர்மனுதாரருக்கு 'F-Schedule' மூலம் கிடைக்கப்பெற்ற சொத்து என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால், மேற்படி சொத்து வாதியின் அனுபவத்தில் இருந்து வருவதாகக் கூறி நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி மேற்படி அசல் வழக்கை மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ளார்.

**6)** 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களை மேற்படி அசல் வழக்கில் சேர்க்க உத்தரவிடப்பட்டுள்ளதைப் பயன்படுத்தி, மனுதாரர் இம்மனுவில் வழக்குரையில் திருத்த வேண்டிய விவரங்கள் என்ற தலைப்பில் " தாவா சொத்தின் உரிமையை தீர்மானிக்க வேண்டியதும் அவசியமாய் உள்ளதால் தாவா சொத்துக்கள் வாதிக்கு சொந்தம் என விளம்புகை செய்தும்" என புதியதாக பரிகாரம் வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இது சட்டத்திற்கு புறம்பானது ஆகும்.

**7)** விளம்புகை பரிகாரம் கோரும் போது, வாதிக்கு தாவா சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யாமல், தாவா சொத்து

தனக்கு உரிமையுடையது என பரிகாரம் கோரமுடியாது. மனுவில் 6வது பத்தியில் நீதிமன்ற கட்டணம் மதிப்பு ரூ.2,000/- என்பதை அடித்துவிட்டு ரூ.7,25,000/- என சேர்த்தும் திருத்த வேண்டும் என மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ளது. நீதிமன்ற அதிகார வரம்பிற்கு மேலான வழக்கை தாக்கல் செய்ய முடியாது என்று தெரிந்துகொண்டே, குறுக்கு வழியில் தாவா சொத்தை அடைய வேண்டும் என்பதற்காக பல ஆண்டுகளுக்கு முன்பாகவே தாவா சொத்து குறித்து வாதி-பிரதிவாதிக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை குறித்து பாகப்பத்திரம் எழுதி அதை பதிவு செய்துள்ளார்கள். மேற்படி சங்கதிகளை வாதி அசல் வழக்குரையில் ஒப்புக்கொண்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிய நிலையில், குறுக்கு வழியில் இந்த மனுவை தாக்கல் செய்து விளம்புகை பரிகாரம் கோரியுள்ளதால், இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கது ஆகும்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:</u>**

**8)** மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வியாகும்.

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**9)** இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியமும் இல்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

**10)** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில், மேற்படி வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில், தாவா சொத்தை 1ம் பிரதிவாதி 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளுக்கு பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரங்கள் வாயிலாக, கடந்த

10.01.2005 அன்று கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளதன் விளைவால் மேற்படி 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்கக் கோரி மனுதாரர் தரப்பில் இ.ம.எண்.10/2025 ஆனது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது, கடந்த 08.08.2025 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது.

**11)** இந்நிலையில், மேற்படி 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளாக சேர்க்கவும், அதனைத் தொடர்ந்து 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளுக்கு எதிராக ஏற்பட்டுள்ள வழக்குமூலத்தைப் பொறுத்த பரிகாரங்களை சேர்க்கவும், மேலும் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதாக விளம்புகை செய்ய விளம்புகை பரிகாரத்திற்காகவும், அசல் வழக்கை திருத்தம் செய்ய வேண்டியும், 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளுக்கு 1ம் பிரதிவாதியால் தாவா சொத்தைப் பொறுத்து ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்ற விளம்புகை பரிகாரத்திற்காக மேற்படி அசல் வழக்கை திருத்தம் செய்ய கோரியும், இம்மனுவானது மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**12)** மனுதாரர் தரப்பில் மேற்படி இ.ம.எண்.10/2025ன் விளைவாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், மனுவில் கண்ட திருத்தல் விவரப்படி அசல் வழக்குரையை திருத்தம் செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டியது நீதியின் பொருட்டு அவசியம் என்றும், இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு ஏராளமான கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்று வாதிடப்பட்டது. மாறாக, எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர் 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களை மேற்படி அசல் வழக்கில் 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளாக சேர்க்க முடியும் என்றும், மேலும் தாவா சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்படுத்திய கிரைய பத்திரம் செல்லத்தக்கதல்ல என மனுதாரர் பரிகாரம் கேட்க முடியும் என்றும், ஆனால் வேறு பரிகாரம் வேண்டுமென்றால் மனுதாரர் தனி வழக்குதான் தாக்கல் செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

**13)** அதனைத் தொடர்ந்து, எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டதாக மனுதாரரால் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்கு மூலத்தில் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றும், தாவா சொத்து மனுதாரருக்கு பாத்தியப்பட்டதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், தாவா சொத்து ' F-Schedule' சொத்தாக 1ம் எதிர்மனுதாரருக்கு கிடைக்கப்பெற்ற சொத்து என தெரிந்தும், அசல் வழக்கை நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி மட்டுமே தாக்கல் செய்து, பின்னிட்டு மேற்படி இடைக்கால மனுவானது அனுமதித்ததைப் பயன்படுத்தி தாவா சொத்தின் உரிமையை தீர்மானிக்க வேண்டியது அவசியம் என்றும், தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்ய மேற்படி அசல் வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது சட்டத்திற்கு புறம்பானது என்றும், விளம்புகை பரிகாரம் கோரும்போது தாவா சொத்து வாதிக்கு எவ்வகையில் பாத்தியப்பட்டது என ஆவணங்கள் தாக்கல் செய்யப்படாமல் வாதியால் பரிகாரம் கோரமுடியாது என்றும் கூறி ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

**14)** இரு தரப்பு வாதங்களையும், வழக்கு கோப்புகளையும் நன்கு கவனமுடன் பரிசீலனை செய்ததில், இம்மனுவானது மேற்படி வழக்கில் இ.ம.எண்.10/2025 மனு, இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டதன் பேரில் அதன் விளைவாக 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களை மேற்படி அசல் வழக்கில் 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளாக சேர்க்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. மேற்படி திருத்தல் விவரமானது அசல் வழக்கை தீர்மானிக்க அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், தாவா சொத்தை 1ம் எதிர்மனுதாரர் 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்களுக்கு பதிவு செய்யப்பட்ட இரண்டு கிரைய பத்திரங்கள் மூலம் இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் சமயம் விற்பனை விற்பனை செய்துள்ளதால், மேற்படி இரண்டு கிரைய பத்திரங்களைப் பொறுத்து

அவை சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரிட வழக்குரையை திருத்தங்கள் செய்ய வேண்டியது அவசியமும், நியாயமும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேற்படி திருத்தல் செய்வதற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படவில்லை என்று அறிய முடிகிறது. மேலும், மேற்படி திருத்தங்கள் மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.10/2025 ஆனது இந்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டதன் விளைவாக ஏற்பட்டுள்ளது என்பதால், அவற்றைப் பொறுத்து அசல் வழக்கில் வழக்குரையை திருத்தம் செய்வது அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**15)** இந்நிலையில், தாவா சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என்று மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், தாவா சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க மனுதாரர் எவ்வித ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும், மேலும் தாவா சொத்து 'F _ Schedule' சொத்தாக 1ம் எதிர்மனுதாரருக்கு கிடைக்கப்பெற்ற சொத்து என்று மனுதாரர் குறிப்பிட்டுள்ள நிலையில், மேற்படி அசல் வழக்கை நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்காக மட்டுமே தாக்கல் செய்து இம்மனுவின் மூலம் தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரத்திற்காக அசல் வழக்கை திருத்தம் செய்யக் கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ளது சட்டத்திற்கு புறம்பானது என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ள விவரங்கள் நியாயமானது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**16)** ஆனால், மேற்படி அசல் வழக்கின் வழக்குரையை பரிசீலனை செய்ததில், தாவா சொத்துக்களும், இதர சொத்துக்களும் ஆதியில் வாதி மற்றும் பிரதிவாதிகளின் குடும்பத்தினர்களுக்கு பூர்வீகமாகவும், கிரையமாகவும் பாத்தியப்பட்டிருந்ததாகவும், அதனைத் தொடர்ந்து தாவா சொத்து உள்ளிட்ட குடும்ப சொத்துக்களை வாதி மற்றும் 1ம் பிரதிவாதியின் குடும்பத்தினர், கடந்த

25.03.1975ம் தேதி ஒரு பாகப்பிரிவினை செய்து பத்திரம் எழுதி பதிவு செய்து அதனடியில் 'A- Schedule' சொத்துக்கள் வாதி மற்றும் ராமாமிர்தம் ஆகியோருக்கு பிரிந்ததாகவும், அதில் 'F-Schedule' சொத்துக்கள் 1ம் பிரதிவாதி மற்றும் ராமாயி என்பவர்களுக்கு பிரிந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், வாதி தரப்பில் தாவா சொத்தான புல எண்.248/1ல் உள்ள ஹெக்.1.41.0 ஏர்ஸ் நிலம் மற்றும் புல எண்.248/3ல் உள்ள ஹெக்.1.48.50 ஏர்ஸ் ஆகிய நிலங்கள் ஐந்து சம பாகங்களாக மீண்டும் பிரிக்கப்பட்டு அதில் தலா ஏக்கர் 1.43 செண்ட் என ஐந்து நபர்கள் பிரித்துக்கொண்டும், மேற்படி 25.03.1975ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் 'A-Schedule' பாகஸ்தர்களான வாதி மற்றும் ராமாமிர்தம் பாகத்தில் தவறுதலாக எழுத விடுபட்டும், அதே சமயத்தில் 'F-Schedule' ஆக காட்டப்பட்ட சொத்து விவரத்தில் 1ம் பிரதிவாதி மற்றும் ராமாயி ஆகியோரின் பாகத்தில் இரண்டு பங்கு நிலமானது, அதாவது ஏக்கர் 1.43 செண்ட் என்பதற்கு பதிலாக ஏக்கர் 2.88 செண்ட் நிலம் என்று ( புல எண்.248/1ல் ஏக்கர் 1.40 செண்ட், புல எண்.248/3ல் ஏக்கர் 1.48 செண்ட்-ம்) அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது போல் எழுதி பதிவாகிவிட்டது என்றும் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது.

**17)** மேலும், வாதி தரப்பில் மேற்படி தவறாக 'F-Schedule'ல் கூடுதலாக 1ம் பிரதிவாதி மற்றும் ராமாயிக்கு தவறாக ஒதுக்கப்பட்டதற்கு பின்னிட்டு, மேற்படி விவரம் தெரியவந்தவுடன், மேற்படி பாகவிஸ்தி பத்திரம் பதிவு செய்தவுடனே பாகப்பத்திரத்தில் கண்ட பத்து பாகஸ்தர்களும் ஒன்றாக உட்கார்ந்து பேசி, பூஸ்திதியில் தலா ஏக்கர் 1.43 செண்ட் நிலமாக பிரித்துக் கொண்டபடி எவ்வித பூசலும் இன்றி அனுபவித்துக் கொள்வதாக உடன்பாடு ஏற்படுத்திக் கொண்டு அதன்படி பிரித்து அனுபவித்து வரப்படுவதாகவும், அதன்படி 1ம் பிரதிவாதி மற்றும் ராமாமிர்தம் ஆகியோர்க்கு புல எண்.248/1ல் ஏக்கர் 0.70 செண்ட்-ம், புல எண்.248/3ல் ஏக்கர் 0.73 செண்ட்-ம் ஆக மொத்தம் ஏக்கர் 1.43 செண்ட் நிலமானது பிரித்து கொடுக்கப்பட்டும், இதேபோல் வாதி மற்றும் ராமாயி ஆகியோர்க்கும்

ஏக்கர் 1.43 சென்ட் நிலமானது பிரித்துக் கொடுக்கப்பட்டு அவரவர் பாகத்தை அவரவர்களால் இதுநாள் வரை யாருடைய நிராட்சேபனை ஏதுமின்றி அனுபவிக்கப்பட்டு வரப்படுகிறது என்றும் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது.

**18)** இந்நிலையில், மேற்படி வாதி தாக்கல் செய்த வழக்குரையை பரிசீலனை செய்ததில், தாவா சொத்து 'F-Schedule' ஆக 1ம் பிரதிவாதிக்கு பிரிந்திருந்தாலும், அது தவறாக இரண்டு பங்கு பாகமானது 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டுவிட்டதாகவும், அதனைத் தொடர்ந்து மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் பதிவு செய்து முடிந்தபிறகு பாகப்பத்திரத்தில் உள்ள அனைத்து பாகஸ்தர்களும் உட்கார்ந்து பேசி முன்பு ஒப்புக்கொண்டது போல் ஒவ்வொரு பாகஸ்தர்களும் தலா ஏக்கர் 1.43 சென்ட் நிலத்தை பிரித்துக் கொண்டு எவ்வித பூசலும் இன்றி அனுபவித்து கொள்வதாக உடன்பாடு வாய்க்காரராக ஏற்படுத்திக்கொண்டதாகவும், அதன் அடிப்படையில் தனக்கு பிரிந்த தாவா சொத்தாக காண்பிக்கப்பட்ட ஏக்கர் 1.43 சென்ட் நிலத்தை அனுபவம் செய்து வருவதாகவும் வாதி தரப்பில் கூறப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. எனவே, தாவா சொத்தைப் பொறுத்த உரிமையானது, மேற்படி வாய்க்காரராக ஏற்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் கோரப்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரிகிறது.

**19)** மேற்கண்டவாறு, தாவா சொத்தில் வாதி உரிமை கோரியுள்ள நிலையில், மேற்படி விவரத்தை பொறுத்து நிரூபணம் செய்யும் சட்டச்சுமையானது, முழுமையாக மனுதாரர்/வாதிக்கே உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், அவ்வாறு தாவா சொத்தைப் பொறுத்து மேற்கண்டவாறு வாதி உரிமை கோரியுள்ள நிலையில், அவற்றைப் பொறுத்து இம்மனுவில் தீர்மானிக்கமுடியாது என்றும், மேற்படி அசல் வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு அவர்களின் கட்சியை சாட்சி மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபணம் செய்ய தகுந்த மற்றும் போதுமான வாய்ப்புகள் அளித்த பின்பே வழக்கு விசாரணையின்

இறுதியில் இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கமுடியும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேற்கண்டவாறு தாவா சொத்து தனக்கு பாத்தியப்பட்டதாக மேற்படி அசல் வழக்கின் வழக்குரையில் வாதி உரிமை கோரியுள்ள நிலையில், தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோர வேண்டி அசல் வழக்கை திருத்தம் செய்ய, இம்மனுவில் வாதி கோரியுள்ள கோரிக்கையானது இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளும்படியாக உள்ளது.

**20)** எனவே, மேற்படி பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டதற்கு பின்பு, தாவா சொத்தைப் பொறுத்து வாதி, 1ம் பிரதிவாதி மற்றும் பல பாகஸ்தர்களுக்குள் ஏற்பட்ட வாய்மொழி உடன்படிக்கையின் அடிப்படையில், வாதி தாவா சொத்தில் உரிமை கோரியுள்ள நிலையில், மேற்படி உரிமையைப் பொறுத்து இம்மனுவில் தீர்மானிக்கமுடியாது என்றும், மேற்படி அசல் வழக்கின் விசாரணைக்குப் பின்னிட்டே தீர்மானிக்கமுடியும் என்றும், அதற்கு இம்மனுவில் வாதி கோரியுள்ளபடி அசல் வழக்குரையில் உள்ள பரிகாரத்தை திருத்தம் செய்வது நீதியின் பொருட்டு அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், மேற்படி அசல் வழக்கின் மதிப்பு மற்றும் இந்நீதிமன்றத்தின் அதிகார வரம்பு ஆகியவற்றை பொறுத்து, இம்மனுவில் எதுவும் தீர்மானிக்கமுடியாது என்றும், அசல் வழக்கை திருத்தம் செய்த பின்பு வழக்கு மதிப்பீடு அதிகமாக இருப்பின், வாதிக்கு வழக்கு மதிப்பீட்டை திருத்தம் செய்யவும், அதற்கான நீதிமன்ற கட்டணம் செலுத்த தகுந்த வாய்ப்பும் அளித்த பின்பே, இந்நீதிமன்றத்தின் அதிகார வரம்பைப் பொறுத்து தீர்மானிக்க முடியும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

**முடிவாக,**

மேற்சொன்ன காரணங்களுக்காக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11ம் தேதியாகிய இன்று அவையறிய பகிரப்பட்டடது.

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.02.11 15:20:59 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.02.11 15:21:06 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**